ஜனவிநோதினி.

இல. 8.] ஆகஸ்டுமீ 1876. [புஸ்த. VII.

கல்யானை.

வலிமையில் யானைக்கு இரண்டாவதான மிருகம் கல்யானைதான். அது கொஞ்சம்குறைய யானை அவ்வளவு பரிமாணமுள்ளது. அது ஏறக்குறைய பன்னிரண்டடி நீளமும், ஆறேழடி உயரமும் உடையது. அதன் கால்கள் குட்டையாயிருக்கும். அதின் தலையில் நாசியினின்று முளைத்த கொம்பொன்று உண்டு. அதன் மேலுதடு நீண்டு கூராயிருப்பதனால் அதன் இரையைக் கும்பலாய்ச் சேர்த்து வாயில் போட்டுக்கொள்ளப் பக்குவமாயிருக்கின்றது. அதன் உடம்பில் உரோமக்கவர்ச்சியில்லாமல் தோல்கள்மாத்திரம் மடிந்துமடிந்து தொங்குகின்றன. அந்த மடிப்புகளுள் தோளண்டையும் வாலண்டையும் இருக்கிற இரண்டு மடிப்புகள் மிகவும் முக்கியமானவை. அதின் தோல் கபிலநிறமுள்ளது; அது அதிக கூர்மையுள்ள கத்திபோலிருக்கும். அதின் கொம்பானது ஒவ்வொன்றுக்கு மூன்றடிக்கு அதிகமாயும் நீண்டிருக்கும். அது அதிக உரப்பான எலும்பினின்று உண்டாகின்றது. இப்படிப்பட்ட ஈட்டிபோன்ற சிறந்த ஆயுதம் அதற்கிருக்கின்றமையால் அது யானை புலி முதலியவைகளைக்கூட லக்ஷியஞ்செய்கிறதில்லை. அதன் கல்லானதோல் அதிவலிமையான சிங்கம்முதலியவைகளின் நகங்களுக்குக்கூட அஞ்சயமாட்டாது. ஆதலால் கல்யானையைப்பார்த்து பயப்படாத மிருகம் ஒன்றுமில்லை.

கல்யானைகள் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள பெருமணல் வெளியான காடுகளிலிருக்கின்றன. யானைகளும் சிங்கங்களும் சஞ்சரிக்கின்ற காடுகளில் ஸாதாரணமாய் அகப்படும். இலை, தழை முதலியவைகள்தான் அவைகட்கு முதன்மையான உணவு. அதனால் அது இயற்கையாய் ஒன்றுக்கும் தீங்குசெய்யத்தக்கதன்று. தைரியத்தில் குறைந்ததென்கிறீர்களோ, அன்று. ஏதாவது வேறொரு ஜந்து எதிர்க்குமானால் பயந்தோடாமல் எதிரேநிற்கும். வேறொரு ஜந்து பிடுங்கிப் புசிக்கமாட்டாத முட்செடிகளையும் முள்தழைகளையுமே அவை முக்கியமாய்ப் புசிக்கின்றன. அவைகளைப் பிடிப்பது வெகு வருத்தம். அவைகள் தூங்கவும் நடமாடவும் உரித்

தான சதுப்புநிலங்களில் குட்டியோடு சஞ்சரிக்கிற தருணம்பார்த்துப் பெரிதை குண்டுவைத்து அடித்துக் கொன்றுவிட்டு குட்டியைப் பிடித்துப் பழக்கவேண்டும். அதன் தோல் குண்டுக்கன்றி மற்றொன்றுக்கும் அசையமாட்டாது.

கல்யானைகளை வேட்டையாடுவது வெகு வருத்தம். அவைகளைப் பிடிக்க எவ்வளவு முயன்றாலும் கையில் அகப்படுகிறதில்லை. அவை ஓடத்தலைப்பட்டால் அப்புறம் ஒருவர்க்கும் ஸாத்தியமன்று. பெரிய முட்புதர்களையெல்லாம் அலக்ஷியமாய் எழும்பித் தாவும். எவ்வளவு அடித்தாலும் அதன் உடம்பில் உறைக்கிறதில்லை. தேஹத்தில் வெடிக் குண்டுகள்போய்ப் பொத்திக்கொண்டாலும் அதையும் லக்ஷியஞ் செய்யாது. எதிர்த்தோடிவருமேயன்றி பின்வாங்காது. புஜம் இருதயம்முதலிய மர்மஸ்தானங்களில் அடிபட்டால்மாத்திரம் தாங்காது.

இப்படிப்பட்ட வலியமிருகத்தின் உருவம் இச்சென்னைமா நகரில் புலி கரடி சிங்கமுதலியவை வைத்திருக்கும் ஸகலஜன விநோதத்தோட்டத்தில் பார்த்தவர்களுக்குத் தெரிந்திருக்குமாயினும், மற்ற நாட்டிலுள்ளவர்கள் இத்துடன் சேர்த்தனுப்பியிருக்கும் படத்தால் தெரிந்துகொள்ளலாம்.

தேஹப்பயிற்சியால் ரத்தம் எங்கும் பரவுதலெப்படி?

நீங்கள் உங்கள் சரீரத்தின் உட்புறத்தைப்பார்த்து அங்கே நடந்தேறிவருகிற செயல்களைக் காணும்படியாயிருக்குமானால், இங்குமங்கும் அசைவதனால் நமக்கு நன்மை உண்டாகுமோவென்று நீங்கள் நினைப்பீர்கள்.

இருதயமானது இரத்தத்தை வெளியே தள்ளுவதையும், சுவாஸாசயங்கள் ஊதுவதையும், இரத்தம் வேகமாய்ப் பாய்வதையும், நரம்புகள் இழுப்பதையும், வழியடைக்கும் சவ்வானது திறந்து மூடிக்கொள்வதையும், மாமிசங்களும் கொழுப்புகளும் உப்புவதையும் சுருங்குவதையும் கண்டால், நீங்கள் பயந்து இனி நாம் இருந்தவிடத்தைவிட்டு அசையக்கூடாது. ஒரே இடத்தில் நிலையாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நமது தேஹத்துள் ஏதாவதொன்று உடைந்துபோம், அல்லது ஏதாவது அசையாமல் நின்றுபோம் என்று எண்ணுவீர்கள். மேலும் ஒரு கடிகாயந்திரத்தை அசைப்பதனாலும் உருட்டுவதனாலும் அதற்கு என்ன குணமுண்டாகுமோ, அதேகுணந்தான் நாம் ஓடுவதனாலும் குதிப்பதனாலும் நமக்கு உண்டாகுமென்று எண்ணுவீர்கள். அது அப்படியே இருந்து நாம் நம் ஆயுள்முழுதும் ஓரிடத்திலேயே

நிலையாய் நிற்கவேண்டுமென்றிருந்தால் நமக்கு எவ்வளவு துக்க காரமாயிராது.

நாம் அப்படியிருப்பதற்காகப் படைக்கப்படவில்லை. எப்போதும் சுருசுருப்பாய் உழைத்துத் தனக்குப் பணிவிடைசெய்வதற்காகவே நம்மை கடவுள் உண்டாக்கியிருக்கிறார். ஆதலால் மனித தேஹங்களாகிய யந்திரங்கள் மனிதர்கள் செய்யக்கூடிய மற்ற யந்திரங்களைவிட மிகவும் சிறந்ததாயும் நுட்பமாயும் இருந்தாலும், அதை அலட்டுவதே அதற்கு எவ்வித நன்மையையும் உண்டாக்குகின்றது. அதனால் நமது காரியங்களுக்கு மிகவும் ஒத்ததாயிருக்கின்றது.

சிறுபிள்ளைகள் குதித்துவிளையாடுவதையும், பந்தயம் ஓடுவதையும், குண்டாங்கரணம்போடுவதையும், இன்னும் அநேகவிதமாய்ப் பயிற்சிசெய்வதையும் காண்கிறீர்களே; இவ்வகையான விளையாட்டுகளிலெல்லாம் தேஹம் எவ்வளவு அலண்டுபோகின்றது. ஆயினும் அதிநுட்பமான இருதயம் யாதொரு கெடுதியும் இல்லாமலிருப்பதுமன்றி, முன்னிலும் அதிக சீர்மையாய்த் தன் வழக்கப்படி அடித்துக்கொள்கின்றது. சுவாஸாசயம்முதலிய மற்ற உறுப்புகளும் அதனால் எவ்விதமான தீங்குமின்றித் தத்தம் வேலையை நன்றாய் நடத்தும். மேலும் அப்படி அலட்டினதால் அந்த யந்திரங்களெல்லாம் கொஞ்சம் வேகமாய் ஓடத் தலைப்படுமானால் அது நமக்கு நன்மைசெய்யுமேயன்றி சிறிதும் தீங்குசெய்யாது. நாம் நமது அவயவங்களை அலட்டுவது இருதயமுதலிய உறுப்புகளைத் துரிதமாய் வேலைசெய்யும்படி செய்வதனாலேதான் நமக்கு அவ்வளவு நன்மையாகின்றது. அப்படிப்பட்ட தேஹப்பயிற்சிகள் வெளிப்புறங்களிலிருந்தால் சர்வோத்தமம்.

எப்போதும் உள்ளேயேயிருந்து அதிலும் அசையாமல் உட்காந்திருப்பவர்கள் வியாதியால் வெகுவாய் வருந்துவார்கள். வெளிப்புறங்களில் நடந்து உலாத்துகிறவர்களுக்கு அது ஒருபோதும் உண்டாகாது.

வெளியிலேயே போகாமல் சிலர் எப்போதும் உள்ளேயே உட்காந்துகொண்டிருக்கிறார்கள்; அதனால் அவர்களுக்குப் பலவிதமான கெடுதிகளுண்டாகின்றன. ரக்தம் ஓடுகிற வேகம் மட்டிட்டுப் போகின்றது. அதனால் ஜீவாதாரமானவைகளும் தங்கள் தங்கள் வேலையில் மந்தப்படுகின்றன. ஆகாரம் ஜீரணமாகாமல் பசிமந்திக்கின்றது. இராக்காலங்களில் அமைதியாய்த் தூக்கம்வாராது. அதனால் பகலிலும் உடம்பு சுருசுருப்பாயிராமல் மந்தமாயேயிருக்கும். அவர்களுக்கு அடிக்கடி குளிர்வரும். கீலுக்குக் கீல் ரக்தம் தோய்ந்து பிடிப்புஉண்டாகும். சிலர் அதற்காக வைத்தியன்வீட்டிற்கோடி மருந்துவாங்கித் தின்பர்ர்கள். அதுவும் தேஹத்திற்குப் பலவீனஞ்செய்யுமேயன்றி நன்மைசெய்யமாட்டாது. அந்த நோ

யை நிவிர்த்திசெய்யத்தக்க மருந்து தேஹப்பயிற்சியேயன்றி வேறொன்றுமல்ல. சில எளியஜனங்கள் எப்போதும் வெளியிலேயே வேலைசெய்துகொண்டிருக்கிறார்களே, அவர்கள் எவ்வளவு வலிமையும் சுருசுருப்புமுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு நோயென்பது ஒருபோதும் உண்டாகிறதில்லை.

ரக்தம் வேகமாய் ஓடுவதற்கு தேஹப்பயிற்சி எப்படி காரணமாகின்றதென்கிறீர்களோ? நமது தேஹமும் அவயவங்களும் அசைந்தால் தேஹத்திலுள்ள மாமிசங்கள் தனக்குள்ளேயிருக்கிற ரக்தநாடிகளை அமுக்குகின்றன. அதனால், தோலினாற்செய்த தண்ணீர்க்குழாயை அமுக்கினால் தண்ணீர் எப்படி வேகமாய் ஓடுமோ அப்படியே ரக்தமும் வேகமாய் தேஹமுழுதும் பாவத் தலைப்படுகின்றது. இருதயத்தைவிட்டு வெளியேபோன ரக்தம் மறுபடி திரும்பி ஒருபோதும் இருதயம்வந்து சேராது. ஆதலால் நாம் அசைந்தாலும் நடந்தாலும் ரக்தமானது எதிர்முகமாய் ஓடும்படி ரக்தநாடிகள் நசுங்குகின்றன.

ரக்தம் வேகமாய் ஓடஓட மற்ற யந்திரங்களும் வேகமாய் உழைக்கத்தலைப்படுகின்றன. இருதயம் தீவிரமாய் அடிக்கும். தன்னிடத்தில் ரக்தம் வந்து சேரும்போதெல்லாம் அதைச் சுத்திசெய்ய போதுமான காற்றைத் துரிதமாய் சுவாஸாசயம் ஏற்றுக்கொள்ளும். சுத்தமான ரக்தம் துரிதமாய் தேஹமெங்கும் பாவி கெட்டுப்போயிருக்கிற வஸ்துக்களையெல்லாம் சுத்திசெய்து தான் பிரவேசிக்கிறவிடமெல்லாம் துரிதமாய்ப் பலப்படுத்தும். இவ்வாறு ரக்தம் வேகமாய் ஓடுவதனால் தேஹத்தின் ஒவ்வொரு அவயவத்திற்கும் பலமும் உற்சாகமும் உண்டாகின்றது. ஆகாரம் துரிதமாய் ஜீரணமாகும். குடல்கள் அன்னப்பாகினின்றும் அன்னசாரத்தை நன்றாய் வேறாகப்பிரிக்கும், நன்றாய் வேர்வையுண்டாகும், அதனால் பசிதீபனமும் நன்றாய் உண்டாகும்; இதனாலேதான் சவுக்கியமாய் வீட்டில் உட்காந்திருப்பவர்களைவிடப் பகற்பொழுதெல்லாம் வெளியில் உழைப்பவர்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாய் எடுக்கின்றன. ஏனெனில், அவர்களுக்குத் துரிதமாய்ச் சுவாஸமுண்டாகி வேர்வையும் அதிகமாய் உண்டாகிறபடியால் உண்ட உணவு சீக்கிரத்தில் சீரணமாய்விடுகின்றது.

இவ்வகையான சரீரப்பயிற்சி வீட்டுக்குள் செய்வதைவிட வெளிப்புறங்களில் செய்வது மிகவும் ஆரோக்கியமானது. எப்படியென்றால், சுத்தமான வெளிக்காற்றிலுள்ள சுவாஸவாயு ரக்தத்தில் அதிகமாய் வந்து கலக்குமாகையால் ரக்தத்திற்கு உயிர்ப்பிறக்கிற சக்தி அதிகமாயுண்டாகும்.

வருந்தியுழைப்பதும் பயிற்சிசெய்வதும் தேஹத்திற்கு பலம். தேஹத்தில் எந்தப்பாகம் வேலைசெய்கிறதோ, அவ்விடத்தில் புதிதாய் ரக்தம்போய்ச்சேர்ந்து அதைப் பலப்படுத்துகின்றது. கருமா

ஒரு கிழவரசனும் அவன் மூன்று பெண்களும்.

(தொடர்ச்சி.)

இப்படி மகாராஜன் தன்னால்முடியாத காரியத்திற்கு வீணாகப் பயமுறுத்திக்கொண்டிருக்கையில், இராத்திரியாய் இடிமுழக்கத்தோடும் மின்னலோடும் காற்றுமழை வந்தது. அப்பொழுதும் பரிவாரத்தை உள்ளே விடமாட்டோமென்று ஒரேபிடிவாதமாய்த் தன் மக்கள் சொன்னதினால், தன் குதிரைகளைக் கொண்டுவரச் சொல்லி இந்நன்றியற்ற மக்களோடு ஒரேவீட்டில் இருப்பதைக் காட்டிலும் அதியுக்கிரமான இந்தக் காற்றுமழையைப்பாராமல் வெளியேபோவதே நல்லதென்று நிச்சயித்தார். அம்மக்களோ பிடித்தபிடியைச் சாதிக்கும் மனிதர்களுக்குத் தாங்கள் சம்பாதித்துக்கொள்ளுங் கெடுதிகளே நியாயமான தண்டனையென்று சொல்லிக்கொண்டு அவரை வெளியே போகவிட்டுக் கதவை மூடிக் கொண்டார்கள்.

காற்று வேகமாய் அடித்தது. மழை வரவர அதிகப்பட்டது. அப்படியிருந்தும் மகாராஜன்: ஆ! இக்காற்றுமழை நம்மக்கள்செய்த துரோகத்தைக்காட்டிலுங் கொடியதா என்று சொல்லிக்கொண்டே அக்காற்றுமழையில் தட்டித் தடுமாறிக்கொண்டு போகத் தலைப்பட்டார். அங்கே வெகுதூரமட்டும் ஒரு செடியுங் கிடையாது. அந்தப் பெரிய *மைதானத்தில் இருண்ட இராத்திரியில் உக்கிரமான காற்றுமழையில் மகாராஜன் காற்றுக்கும் இடிக்கும் பயப்படாமல் திரிகையில் காற்றைப்பார்த்து: காற்றே! இப்பூமியெல்லாம் சமுத்திரமாய்விடும்படி மழையைக் கொண்டுவந்துவிடு; அல்லது சமுத்திரத்தின் அலைகளை இப்பூமியின்மேல் புரண்டோடும்படி செய்து நன்றியற்ற ஜந்துவாகிய மனுஷப்பூண்டு இல்லாமல் துடைத்துவிடு என்றார். அப்பொழுது அவ்வயதுசென்ற மகாராஜனோடு அப்பஞ்சையாகிய அகசியக்காரனைத்தவிர வேறு ஒருவருமில்லை. அந்த அகசியக்காரனோ தன் எஜமானனை விடாமல் அவருக்கு நேரிட்ட கஷ்டத்தை மறக்கடிக்க வேடிக்கையான அகசியங்களைச் செய்துகொண்டு: ஐயா! மகாராஜனே, இதென்ன கெட்டராத்திரியாயிருக்கிறது. இதை நாம் எப்படி நீந்தப்போகிறோம், உங்கள் மகளைத் தயைசெய்யும்படி கேட்டுக்கொண்டு நீங்கள் சற்று உள்ளே போனால் நலமாயிருக்குமென்றும்,

சந்தவிருத்தம்.

போவதும் எவ்வழி நீயெனிலோ என் புல்லறிவுக்குள நலனாலே
மேவியவித்துயர் அடைவதும் எந்தன் விதியாமெனவே நாடோறும்
தாவியடிக்குங் காற்றையுமழையுஞ் சாதாரணமாகவே எண்ணி
ஆ ஆ எனவே ஓடி எதிர்ப்பே னகசியநெறியா லெங்கோனே

என்றுஞ்சொல்லி, ஆ! இது என்ன சொகுசான இராத்திரி; இந்த இராத்திரியின் குளிருக்கு எப்பேர்க்கொத்த சீமாட்டியும் கோபத்தைவிட்டு தயைசெய்வாள். இதை நான் சத்தியமாய்ச் சொல்வேன் என்று வேடிக்கையாய்ச் சொன்னான். அவ்வாறு அப்பஞ்சையாகிய அகசியக்காரன் தொடர்ந்துவரும்படி திரிந்துகொண்டிருந்த மகாராஜனை கெங்கனென்று பேரிட்டுக்கொண்டு அரசனுக்குத் தெரியாமல் அவனை இடைவிடாது பின்சென்ற நம்பிக்கையுள்ள வேலைக்காரனாகிய சுவிக்கிரமன் பார்த்து: ஐயோ சுவாமீ! நீங்கள் இங்கேயாயிருக்கிறீர்கள். எப்பொழுதும் ராத்திரியில் சஞ்சரிக்கிற ஜந்துக்கள்கூட இப்பேர்க்கொத்த இராத்திரியில் வெளிப்புறப்படாவே. இந்தப் பயங்கரமான காற்றுமழைக்கு அஞ்சித் துஷ்டமிருகங்களெல்லாம் ஒதுக்கிடந்தேடி ஓடிப்போயினவே. அப்படியிருக்க, இந்தத் துக்கத்தையாவது பயத்தையாவது மனிதன் சகிக்கமுடியுமாவென்றான். அதற்கு மகாராஜன்: அப்பா! நீ இப்படி சொல்லாதே; பெருந்தநோயால் வருந்தும் மனிதனுக்கு இப்பேர்க்கொத்த சிறு துயரங்களால் வருத்தமுண்டாகுமா? மனது சுகமாயிருந்தால் தேகமும் சுகத்தைத் தேடும். இப்பொழுது என் மனதிலுண்டாயிருக்கும் காற்றுமழையினால் மெய்-வாய்-கண்-மூக்குச்-செவியாகிய பொறிகளுக்கு வேறொன்றுந் தோன்றாமலிருக்கிறதென்றுசொல்லி, ஐயோ! குழந்தைகளுக்குக் கைகளும் உணவும் மற்றெல்லாப்பொருளுந் தாய்தந்தைகள்தானே. அப்படியிருக்க, அவர்களிடத்தில் மக்கள் நன்றியற்றிருப்பது உணவைக்கொண்டுவந்து கொடுக்கும் கையை வாயே கடித்துக் கிழித்தாற்போல் இருக்கிறதென்று மக்களுக்குத் தாய்தந்தைகளிடத்து நன்றியில்லாமையைப்பற்றி வெகுவாய்ப் பேசினார்.

இவர் இப்படிப் பேசுவதைக் கேளாமல் கெங்கன் இந்த மைதானத்தில் நீங்களிருப்பது சரியல்லவென்று வெகுவாய் வருந்திக் கேட்டுக்கொண்டு அங்கேயிருந்த ஒரு சிறு குடிசைக்குள் போகவேண்டுமென்று சொன்னான். இதைக்கேட்டு அக்குடிசைக்குள் அகசியக்காரன் முன்னே புகுந்துபார்த்து: ஓகோ! இதில் ஒரு பிசாசு இருக்கிறதென்று திடுக்கிட்டுப் பயந்து ஓடிவந்தான். உள்ளேபோய்ப் பார்க்கையில் அது பிசாசு அல்லவென்றும், காற்றுமழைக்கு அஞ்சி அந்த நிர்மானுஷியமான குடிசைக்குள் புகுந்திருந்தவன் ஓர் பைத்தியக்காரனென்றும், அவன் பேய்களைப்பற்றி வாய்பிதற்றிக்கொண்டிருந்ததனால் அதைக்கேட்டு அகசியக்காரன் பயந்து ஓடிவந்துவிட்டானென்றும் தெரியவந்தது. மேலும் குடிசைக்குள் இருந்தவன் உண்மையான பைத்தியத்தினாலோ, அல்லது இரக்கமுள்ள நாட்டுப்புறத்து ஜனங்களிடத்தில் பணம்பறிக்கும் துராசையினாலோ பைத்தியக்காரர்களைப்போல் வேஷம்போட்டுக்கொண்டு கிராமங்கள்தோறும் போய், ஐயா! என்பேர் பொன்னன், நான் ஏழை. என்

பேர் பிளிச்சைக்கண்ணன், நான் பஞ்சை, எனக்குப் பிச்சைபோடுங்களென்று சொல்லி ஊசிகளினாலும் ஆணிகளினாலும் கொம்புகளினாலும் உடம்பைக் கிறிக்கொண்டு இரத்தங்காட்டி இதுபோன்ற இன்னும் அநேகம் பயங்கரமான காரியங்களைச் செய்து ஒருவாறு கெஞ்சித் தயை பிறப்பித்துக்கொண்டும், ஒருவாறு வெறியர்களைப்போல் திட்டிப் பயமுறுத்தியும் ஒன்றுந் தெரியாத நாட்டுப்புறத்துச் சனங்களை ஏமாற்றிப் பிச்சைவாங்கிக்கொண்டு போகிறவர்களில் ஒருவனாயிருந்தான். அவன் தன் மானத்தைமூட அரையிற்கட்டிக்கொண்டிருந்த கம்பளியைவிட வேறொன்றும் இல்லாமல் வெகு ஈனஸ்திதியிலிருந்ததை அரசன்பார்த்து: ஆ! இந்தப் பயல் தனக்கிருந்ததையெல்லாம் மக்களுக்கிட்டு இந்தக்கதியாய்விட்டவன். நன்றியற்றமக்களால் அன்றி வேறொருவராலும் இப்பேர்க்கொத்த தாழ்ந்தஸ்திதி நேரிடாதென்று சொன்னார்.

இப்படி மகாராஜன் பைத்தியக்காரனைப்போல் பலவாறு பேசுவதைப் பார்த்து, உத்தமனாகிய கெங்கன் இவருக்குத் தன்மக்கள் செய்த துரோகத்தினால் புத்திசிதறிப் பைத்தியம் பிடித்ததென்று நினைத்து, அதுவரைக்கும் வெளிப்படுத்தச் சமயம் நேராமலிருந்த தன் பிரீதியைக் காட்டும்பொருட்டு அரசனுக்கு அனுகூலமான சில காரியங்களைச் செய்யத்தொடங்கினான். அதாவது மகாராஜனிடத்திலுள்ள பிரீதியினால் அவரைக் கைவிடாமலிருந்த சில வேலைக்காரரைக்கொண்டு பொழுதுவிடிந்தவுடனே தனக்கும் தன் பரிஜனங்களுக்கும் வாசஸ்தானமாயும் தன்னதிகாரத்துக்கு உள்பட்டதாயும் இருந்த பீமகிரியென்னுங் கோட்டைக்கு மகாராஜனை இட்டுக்கொண்டுபோனான். அப்புறங் காசிதேசத்துக்குப் போய் காந்தர்வதத்தையினுடைய அரண்மனைக்கு வேகமாய்ச்சென்று அவள் தந்தையாகிய மகாராஜனிருந்த பரிதாபமான ஸ்திதியையும், அவள் சகோதரிகளின் கொடுமையையும் செவ்வையாய் விவரித்துச்சொன்னான். தந்தையிடத்தில் வெகு விசுவாசமுள்ள அக்குழந்தை அதைக்கேட்டுக் கண்ணீர்விட்டழுது, அந்நாட்டரசனாகிய தன் கணவனைப் பார்த்து: மகாராஜனே! என் சகோதரிகளையும் அவர்கள் கணவரையும் ஜயித்து என் தந்தையை மறுபடியுஞ் சிங்காதனத்தில் நிறுத்தும்பொருட்டு தாங்கள் தகுந்த சேனையை அனுப்பவேண்டும். என் தந்தையைப்பார்க்க எனக்கும் உத்தரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அப்படியே ஆகட்டுமென்று அரசன் சொல்லச் சேனையோடு புறப்பட்டுப் பீமகிரியின் சமீபத்தில் வந்திறங்கினாள்.

இதற்குள் உத்தமனாகிய சுவிக்கிரமன் பைத்தியக்காரனென்று காவல்செய்யும்படி ஒப்புவித்தவர்களிடத்திலிருந்து மகாராஜனெப்படியோ ஓடிப்போய் பார்த்தவர்கள் ஐயோ என்னும்படி வைக்கோல் முட்செடி காட்டுக்கோரை முதலியவைகளை அங்குள்ள

கோதுமை வயல்களில் பிடுங்கி கிரீடத்தைப்போற் செய்து தலையிற் போட்டுக்கொண்டு உரக்கப் பாட்டுப்பாடி பீமகிரிகோட்டையை சுற்றியிருக்கும் புலங்களில் திரிவதைக் காந்தர்வதத்தையின் பரிஜனங்களிற் சிலர் பார்த்து இட்டுக்கொண்டுவந்தார்கள். இதைக்கேட்டுக் காந்தர்வதத்தை உடனே தந்தையைப் பார்க்கவேண்டுமென்றாள். அதற்கு அவளிடத்திலிருந்த வைத்தியர்கள்: அம்மா! நாங்கள் கொடுத்த மூலிகைகள் நன்றாயுறைத்துத் தூங்கியெழுந்து பித்தம்தெளிந்து நல்ல ஞானமுண்டாகிறவரையிலும் அவரைப் பார்ப்பது சரியல்லவென்றுசொல்ல, அப்படியே ஆகட்டுமென்று காந்தர்வதத்தை ஒத்துக்கொண்டாள். மேலும் வயதுசென்ற மகாராஜனுக்குச் சொஸ்தமாகும்பக்ஷத்தில் தன்னிடத்திலுள்ள வெகு கெட்டிக்காரர்களாகிய அவ்வைத்தியர்களுக்குத் தனக்குள்ள பொருளையும் ஆபரணங்களையும் கொடுக்கிறதாகச்சொல்ல அவருதவியால் தவளகேசமகாராஜன் சீக்கிரத்தில் தன் மகளைப்பார்க்கத்தக்க நல்லஸ்திதிக்குவந்தார்.

அப்புறந் தந்தையும் மகளுஞ் சந்தித்தது வெகு பரிதாபமாயிருந்தது. அருமைக்குழந்தையைப்பார்த்த சந்தோஷமும் சொற்பதப்புக்காக அவளை வெறுத்து மறுபடி அவளுடைய பிரியமான நடக்கையைப்பார்த்து உண்டான வெட்கமும் தவளகேசமகாராஜன் மனதைக் கலக்கிவிட்டன. அன்றியும் முன்னிருந்த பைத்தியம் இன்னும் செவ்வையாய் நீங்கவில்லை. ஆகையால்தான் இருந்த இடம் இப்பேர்க்கொத்ததென்றும், தன்னை அன்போடாதரித்துப்பேசின காந்தர்வதத்தை இன்னாளென்றும் அறியாமல் முதலில் சந்தேகப்பட்டு, அப்புறந்தெளிந்து உடனே சந்தோஷமும் வெட்கமும் அதிகப்பட்டதனால், மகாராஜன் மெய்ம்மறந்து சுற்றும்புறமும் நின்றவர்களைப்பார்த்து: இதோ என் எதிரில் நிற்கும் உத்தமி என் மகளாகிய காந்தர்வதத்தையோ அல்லவோ என்று எனக்குச் சந்தேகமுண்டாயிருக்கின்றது. இதற்கு நீங்கள் என்னைப் பரிகாசம் செய்யவேண்டாம் என்று சொன்னார். அப்புறம் தன் மகளைப்பார்த்து: அம்மா! நான்செய்த தப்புகளையெல்லாம் நீ மன்னிக்கவேண்டியதென்று கால்மடக்கிக் கேட்கையில் அவ்வுத்தமி பதிலுக்குக் கால்குனித்து: ஐயா! நீங்கள் என்னை ஆசீர்வாதம் பண்ணவேண்டியதைவிட்டு இப்படி எனக்கெதிரில் தாள்குனிந்து கேட்கலாமா? உங்கள் அன்புள்ள மகளாகிய காந்தர்வதத்தையென்னும் நானல்லவோ அப்படி செய்யவேண்டியது என்றுசொல்லி,தன் தந்தையைப்பார்த்து:ஐயா! உங்களுக்கு என் சகோதரிகள்செய்த கொடுமை இவ்வளவென்று சொல்லிமுடியுமோ? அதைப்பற்றி நீங்கள் விசனப்படவேண்டாம் என்று கண்ணைத்துடைத்தாள். பிறகு, ஐயோ! என் சகோதரிகள் சற்றும் வெட்கமின்றி வயதுசென்ற பிரியமான தந்தையின் நரைத்த தலையைக்கூடப்பார்க்காமல் காற்றுமழையில் துரத்திவிட்டார்களே; அப்பேர்க்கொத்த மழையில் என்னை எப்பொழுதாவது கடித்த என்

பகையாளியின் நாய்வந்தாலும் அந்த ராத்திரியெல்லாம் மூட்டம் போட்டுக் குளிர்காயும்படி செய்வேனேயென்று அலங்காரமாய்ச் சொன்னாள். மறுபடியுந் தன் தந்தையைப்பார்த்து அவருக்குச் சகாயஞ்செய்யும்பொருட்டுத் தான் காசியிலிருந்து வந்ததை விவரித்துச்சொன்னாள். அதற்கு அவர்: அம்மா! நான்செய்ததை மறந்து மன்னிக்கவேண்டியது. நானோ கிழவன், புத்திகெட்டவன். இன்னது செய்கிறேனென்று தெரியாதவன். உனக்கென்னிடத்தில் பிரீதி இல்லாமலிருக்க அநேககாரணங்கள் இருக்கின்றன. உன் சகேதரிகளுக்கோ அப்படியல்ல என்று உருக்கமாய்ச் சொன்னார். அதற்கு காந்தர்வதத்தை உங்களிடத்தில் பிரீதி இல்லாமலிருக்க என் சகோதரிகளுக்குங் காரணமில்லை எனக்குங் காரணமில்லையென்றாள்.

இப்படி பக்திவிசுவாசமுள்ள மகளின் ஆதரணையில் இருந்து தகுந்த வைத்தியர்கள் கொடுத்த நல்ல மருந்துகளால் தூக்கம்பிடித்து மூத்தமக்களுடைய கொடுமையினால் தாறுமாறாய்ச் சிதறிப்போன புத்தி செவ்வைப்பட்டு தவளகேசமகாராஜன் சுகமாயிருந்தார். வெகு கொடியவர்களாகிய அவர் மூத்தமக்களுக்குப் பின்பு சம்பவித்ததைச் சுருக்கமாய்ச் சொல்லுவோம்.

தகப்பனைக் கொஞ்சமேனும் நன்றியில்லாமல் மோசஞ்செய்த அப்பாதகிகள் தங்கணவரிடத்தில்மாத்திரம் எப்படி நம்பிக்கையாயிருப்பார்கள்? அவர்களுக்கு அடங்கி நடக்கவேண்டியதை முழுதும்விட்டு வெளிப்படையாய் அந்நியரிடத்தில் மனதைச் செலுத்திச் சற்றும் பாவத்திற்கு அஞ்சாமல் உக்கிரகர்மாவென்னும் ஒருவனையே இருவரும் வைத்துக்கொண்டிருந்தார்கள். அவன் யாரெனில், சிலகாலத்திற்குமுன் இறந்துபோன ஓர் பிரபுவின் வைப்பாட்டிமகன். அக்கொடும்பாவி தன் தந்தைக்கு நியாயமான பிள்ளையாயும் பாத்தியஸ்தனாயுமிருந்த சுலோசனனென்னும் சகோதரனைத் துரோகம்செய்து ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு பல கொடுமைகளினால் தானே பிரபுவாய்விட்டவன். கேகவி மந்தரை என்னும் பாவிகளுக்குத் தகுந்த நாயகன். இப்படி இருக்கையில் மந்தரையின் புருஷனாகிய சுபாரிசன் இறந்துபோனதினால் அவள் உடனே உக்கிரகர்மாவை வெளிப்படையாய் வைத்துக்கொண்டாள். இந்த உக்கிரகர்மா அவ்விரண்டு சகோதரிகளிடத்திலும் பிரீதியுள்ளவனைப்போல் பலதடவை அவர்களுக்கு வெவ்வேறாகச் சொல்லியிருந்ததனால் கேகவி மந்தரைசெய்ததைப் பொறுக்காமல் அவளை விஷம்வைத்துக் கொன்றாள். இந்த துர்மார்க்கத்தை அவள் புருஷனாகிய சுமதி தெரிந்துகொண்டு உக்கிரகர்மாவிடத்தில் அவளுக்குண்டாயிருந்த கெட்டமோகத்தையுங் கேள்விப்பட்டு அவளைச் சிறையிலடைத்தான். கேகவி தன் மோகம் வீணாய்ப்போனதினால் மனங்கொதித்து வெறிகொண்டு ஜடுதியில் தன்னைத்தானே

கொன்றுகொண்டிறந்தாள். இப்படி இப்பாதகிகளுக்கு கடவுள் தகுந்த சிட்சை செய்தார்.

காசிதேசத்திலிருந்து வந்த வைத்தியர்களின் வல்லமையினால் தவளகேசமகாராஜனுக்குப் பைத்தியம் நீங்கி அனுகூலமானவுடனே காந்தர்வதத்தை தன் தகப்பனுக்கு நம்பிக்கையுள்ள மந்திரியாகிய சுவிக்கிரமனைப்பார்த்து: ஐயா! காசிதேசத்திலிருந்து நம்மோடு வந்த சைநியங்களுக்குத் தாங்களே சேனாபதியாய் என் சகோதரிகளின் சேனைகளை எதிர்த்துப் போர்செய்யவேண்டியதென்றாள். அதற்குச் சுவிக்கிரமன் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, காசிதேசத்துப் போர்வீரர் புடைசூழ்ந்துவர, கேகவி மந்தரை இவர்களின் சோரநாயகனாகிய உக்கிரகர்மாவின்மீது போர்க்குச்சென்றான். சத்தியவான்கள் அற்பபலத்தைக்கொண்டு மோசக்காரருடைய பெருஞ்சேனையையும் பராக்கிரமத்தினால் வெல்லுகிறார்களல்லவா? அப்படியே சுவிக்கிரமனும் உக்கிரகர்மாவோடு பெரும்போர்செலுத்தி அவன் படைகளைச் சிதறடித்துப் போர்க்களமெங்கும் பிணக்காடாக்கி உக்கிரகர்மாவையுங் கொன்றான்.

இந்தச் சங்கதியைக் காந்தர்வதத்தை கேட்டு வெகு சந்தோஷப்பட்டுத் தந்தையைப்பார்த்து: மகாராஜனே! தாங்கள் மறுபடியும் மகுடஞ்சூட்டிக்கொண்டு செங்கோல்செலுத்தவேண்டும். மந்திரிபிரதானிகளோடு சிங்காதனத்தில் மறுபடியுங் கொலுவீற்றிருக்கும் உங்களைப் பார்த்தாலன்றி உங்களைப்பற்றி எனக்கு இதுவரையிலுண்டாயிருக்கும் துன்பந் தீராதென்று வெகு அன்போடு வேண்டிக்கொண்டாள். அதற்குத் தவளகேசமகாராஜன்: அம்மா! எனக்கு வயதாய்விட்டது. இனிமேல் ராஜகாரியம் பார்க்கும் புத்தியுந் திறமுமுண்டாவதேது? அன்றியும் இந்தராஜ்யத்தினால் எனக்கு ஆகவேண்டியதென்ன? உன்னிடத்திலேயே என் காலத்தைக் கழிக்கவேண்டுமென்றிருக்கிறேன் என்று சொல்லி தன் மூத்தமகளாகிய கேகவியின் புருஷனான சுமதியை வரவழைத்து அவனைப்பார்த்து: அப்பா! சுமதி, உன் குணத்துக்குத் தகுந்த பெயரே உனக்குக் கிடைத்தது. நீ வெகு உத்தமன் வெகு பொறுமையுள்ளவன். அன்றியும் உன் மனைவியாகிய கேகவியின் துர்நடத்தையில் சற்றும் பிரியமில்லாதவன். அவளை நீ சிறைபிடித்ததினாலேயே உன் குணமெல்லோருக்குந் தெரியவந்தது. அப்பாவியும் அவள் தங்கையாகிய மந்தரையும் இறந்ததனால் இனிமேல் உன்னுடைய தருமமான மார்க்கத்தை தடைசெய்வாரில்லை. ஆகையால் நீயே இந்தத் தலைய நகரத்திற்கு அரசனாய் மனுநீதிதவறாமல் வெகுகாலம் செங்கோல் செலுத்தவேண்டியதென்று தன் மருமகனாகிய சுமதிக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து, தானும் தன் மகளாகிய காந்தர்வதத்தையும் மந்திரியாகிய சுவிக்கிரமனும் காசிதேசத்திற்குச் சென்று சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

மூன்று விஞக்கள்.

முன்னொருகால் இடைப்பையன் ஒருவன் ஒரு விசேஷ யோக்கியதைக்காகப் பேர்பெற்றுக்கொண்டிருந்தான். யார் என்ன கேள்விகேட்டாலும் அதற்கு அவன் தகுந்த விடைகொடுக்கிறுனென்று எங்கும் பிரசித்தியுண்டாயிற்று. இப்படி இருக்கையில் ஒருநாள் இச்செய்தி அப்பட்டணத்து அரசன் காதில் விழுந்தது. அவன் அது உண்மையென்று நம்பாமல் அந்தப் பயல் எங்கேயிருந்தாலும் பிடித்துத் தன் அரண்மனைக்குக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான்.

அப்படியே அரசனேவலாளிகள் வெகு துரிதமாயோடி அப்பிள்ளையைப் பிடித்து, உன்னை அரசன் இப்போதே கைப்பிடியாய்ப் பிடித்துவரும்படி உத்தரவுசெய்தாரென்று சொல்ல, அவன்: தன்னிடத்தில் என்ன குற்றமோவென்று திகிற்பட்டுக்கொண்டே புறப்பட்டுவந்து அரசன் முன்னிலையில் நின்றுன். அவனைப்பார்த்து அரசன் வினவியதாவது: 'இப்போது நான் உன்னைக் கேட்கப்போகிற மூன்று கேள்விகளுக்கும் நீ சரியாய் உத்தரம் உரைப்பாயாஞல் உன்னை நான் என் சொந்தப்பிள்ளைபோலவே பாராட்டி இந்த அரண்மனையிலேயே வைத்துக்கொள்வேன் என்றுன். அதற்கு அந்தப் பயல் சொன்னது: 'அந்தக் கேள்விகள் என்னவையா?'

அரசன்: முதலாவது 'சமுத்திரத்தில் எத்தனை நீர்த்துளிகளிருக்கின்றன?'

பயல்: 'ஓ மகாராஜனே! இப்போது நான் சமுத்திரத்திலிருக்கிற துளிகளைக் கணக்கிடுகிறவரையில் அதிகமாய் ஒரு துளிகூட அதில் வந்து விழாதபடி உலகத்திலுள்ள ஆறுகளையெல்லாம் கொஞ்சகாலம் நிறுத்திவைப்பீர்களேயாஞல், சமுத்திரத்தில் இத்தனை துளிகளென்று உடனே சொல்லுவேன்.'

அரசன்: இரண்டாவது 'ஆகாயத்தில் எத்தனை நக்ஷத்திரங்களிருக்கின்றன?'

பயல்: 'பிரபுவே! பெரிய வெள்ளைக்கடிதமொன்று தயவுசெய்யுங்கள்'' என்று கேட்டு வாங்கிக்கொண்டு, அதில் ஒருவராலும் பார்த்து அளவிடக்கூடாமலும், பார்ப்போர்கள் கண்கூசும்படியாகவும் அந்தக் கடிதம் நிரம்பச் சிறுசிறு புள்ளிகளை லேகினியாஞல் வெகு அழகாய் அமைத்து, 'இந்தக் கடிதத்தில் எத்தனை புள்ளிகளிருக்கின்றனவோ, அவ்வளவு நக்ஷத்திரங்கள்தான் ஆகாயத்திலிருக்கின்றன; இதைக் கூட்டிக்கொள்ளுங்கள்' என்றுன். அதைக் கூட்டத்தக்கவர் உலகத்தில் ஒருவருமில்லை.

அரசன்: மூன்றாவது 'காலசக்கிரத்தில் எத்தனை நிமிஷங்கள் உண்டு?'

பயல்: 'வடக்கே வயிரக்கல்மலையொன்று உளது. அது ஒரு மைல் உயர்ந்தும், ஒரு மைல் அகன்றும், ஒருமைல் ஆழ்ந்துமிருக்கின்றது; அதில் நூறுவருஷத்திற்கொருதடவை சிறு பக்ஷியொன்று வந்து தன் மூக்கைத் தீட்டுவதுண்டு. அப்படித் தீட்டுவதால் அம்மலைமுழுதும் எப்போது தேய்ந்துபோகுமோ, அப்போதுதான் காலசக்கிரத்தில் ஒரு விநாடியாகும். நூற்றாண்டுக்கொருதரம் ஒரு பக்ஷி மூக்கைத் தீட்டினால் வைரக்கல் மலை தேயுமோ?

இப்படி இடைப்பையன் சொன்ன மூன்று விடைகளையும் கேட்டு அரசன் ஆச்சரியப்பட்டு, குழந்தாய்! என் வினாக்களுக்கு நீ நன்றாய் விடைகொடுத்தாய்; இன்றுமுதல் நீ என்னுடன் இவ்வரண்மனையிலேயே இருக்கவேண்டும். நான் உன்னை என் பிள்ளைபோலவே பார்த்துவருவேன் என்றான்.

அதிர்ஷ்டஹீனனான மூராத்.

மூடநம்பிக்கைதான் எப்போதும் துன்பத்திற்குக் காரணம்.

துர்க்கிதேசத்து அரசன் மாறுவேஷம் போட்டுக்கொண்டு இராக்காலத்தில் கான்ஸ்டான்டிநோபில் நகரத்தின் தெருவுகளில் உலாத்துகிற வழக்கமுண்டு. நிலவுகாலத்தில் ஒருநாள் ராத்திரி தன் பிரதான மந்திரியைக் கூட அழைத்துக்கொண்டு வழக்கப்படி போனான். கயிறுதிரிக்கிறவன் ஒருவன் வீட்டண்டை போகும்போது மனுஷியருக்கு வரும் ஆபத்துசம்பத்துகள் அதிர்ஷ்டவசமா அல்லவா என்பதைப்பற்றி மிகவும் விவாதப்பட்டு காஜியாஹஸ்ஸன் ஆல்ஹபால் என்னும் கயிறுதிரிக்கிறவனைப்பற்றியும், அவனுடைய இரண்டு சிநேகிதர்களாகிய ஸாத், ஸாதி என்பவர்களைப்பற்றியும் சொல்லியிருக்கிற அரபிக்கதை அவ்வரசனுக்கு ஞாபகத்தில் வந்து: "இவ்விஷயத்தில் உன் அபிப்பிராயம் என்ன?" என்று தன் மந்திரியைக் கேட்டான்.

மந்திரி: "மகாராஜனே! இவ்வுலகத்தில் சம்பத்துக்குக் காரணம் முக்கியமாய் விவேகமேயன்றி அதிர்ஷ்டமல்ல."

அரசன்: "விவேகத்தைவிட அதிர்ஷ்டந்தான் மனிதர்களுக்கு அதிக உதவிசெய்கிறது. இவன் அதிர்ஷ்டசாலியென்றும், அவன் அதிர்ஷ்டஹீனனென்றும் சொல்லப்படுவதை நீ தினந்தோறும் கேட்கிறதில்லையா? இது அனுபவத்திற்கு ஒத்திராவிட்டால் ஜனங்களுக்குள் இந்த அபிப்பிராயம் எப்படி வழங்கிவரும்?"

மந்திரி: "உம்மோடு வாதிப்பது எனக்குத் தகுதியல்ல."

அரசன்: "உன் மனதிலிருப்பதை நீ சங்கோசப்படாமல்சொல்."

மந்திரி: "ஜனங்கள் மற்றவர்களுடைய சரித்திரத்தைப்பற்றி ஸ்தூலமாய் அறிவார்களேயன்றி, அவர்கள் விவேகத்தோடும் விவேகமில்லாமலும் செய்திருக்கிற ஒவ்வொரு காரியத்தையும் சூக்ஷமமாய் அறியார்கள். ஜனங்களுக்குள் வழங்கிவருகிற அபிப்பிராயத்திற்கு இதுதான் காரணம். என் அபிப்பிராயத்திற்குத் திருஷ்டாந்தமாக, பாக்கியத்திலும் துர்ப்பாக்கியத்திலும் பேர்போன இரண்டுபேர் இப்பட்டணத்தில் இப்போதிருக்கிறதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களில் ஒருவன்பேர் அதிர்ஷ்டஹீனனுன் மூராத்; மற்றவன்பேர் பாக்கியஸாலதின். நாம் இப்போது அவர்களுடைய சரித்திரத்தைக் கேட்போமானால் அவர்களில் ஒருவன் விவேகசாலியென்றும், மற்றவன் விவேகசூன்னியனென்றும் நாம் காணுவோம்."

அரசன்: "இவர்கள் எங்கே வாசஞ்செய்கிறார்கள்? நாம் தூங்குமுன்னமே அவர்கள் வாயாலே அவர்களுடைய சரித்திரத்தைக் கேட்கவேணும்."

மந்திரி: "அதிர்ஷ்டஹீனனுன மூராத் அடுத்த தெருவில் வசிக்கிறான்" என்றான்.

அரசனும் மந்திரியும் அத்தெருவில் போயும் போகாமலுமிருக்கும்போதே உரத்த அழுகைக்குரல் கேட்டது. அச்சப்தம் உண்டான திசையைப் பிடித்துக்கொண்டு இருவரும்போய்க் கதவுதிறந்துவைத்திருந்த ஒரு வீட்டுக்குவந்து அவ்விடத்தில் தலைப்பாகையைக் கிழித்துக்கொண்டும் புலம்பி அழுதுகொண்டும் இருந்த ஒருவனைக் கண்டு: "ஏன் விசனப்படுகிறாய்?" என்று கேட்க, கதவண்டையில் தளவரிசைமேல் கிடந்த சீனுபாத்திரத்தின் உடைந்ததுண்டுகளை அவன் காட்டினான்.

அரசன் உடைந்த துண்டுகளில் ஒன்றை எடுத்து: "இது சந்தேகமில்லாமல் அழகான பீங்கான்தான்; ஆயினும் ஒரு பீங்கான் பாத்திரம் உடைந்துபோனால் நீ ஏன் இவ்வளவு விசனப்படவேணும்?" என்று கேட்க, அவன் புலம்பலை நிறுத்தி வியாபாரிகளைப்போல் வேஷம்பூண்டவர்களுடைய உடுப்பைப்பார்த்து: "ஆ! பெரிய மனிதர்களே! நீங்கள் பரதேசிகளைப்போல் தென்படுகிறீர்கள். என் ஆருத்துயரத்திற்கு எவ்வளவோ காரணமுண்டு. அதிர்ஷ்டஹீனனுன மூராத் உடன் பேசுகிறோமென்று உங்களுக்குத் தெரியவில்லையே! நான் பிறந்ததுமுதல் இதுவரையில் எனக்கு நேரிட்டிருக்கிற தௌர்ப்பாக்கிய இடையூறுகளையெல்லாம் நீங்கள் கேட்டால் வெகுசாய் என்மேல் இரக்கங்கொண்டு என் ஆருத்துயரத்திற்குத் தகுந்த காரணம் உண்டென்று ஒப்புக்கொள்வீர்கள்" என்று சொன்னான்.

தௌர்ப்பாக்கியனான மூராத்துக்கு நேரிட்ட ஆபத்துக்களைச் சொல்லும்படி அரசன் அவனைக் கேட்க, அவன் பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்:

"என் தகப்பனார் இப்பட்டணத்தில் ஒரு வியாபாரியாயிருந்தார். நாய் முகத்தோடும், சர்ப்பவாயோடும் நான் பிறந்ததாகவும், என் குரூபத்தை மறைக்கிற துவரிதத்தில் ஒரு சணல்நூல் துணியில் என்னைச் சுருட்டிவைத்ததாகவும், கிரகசாரம்போராமல் மேற்படி துணி அரசனுடைய தலைப்பாகையாகத் தோன்றினபடியால் தன் தலைப்பாகையைத் தொட்ட அகந்தைக்காக அரசன் அவர்மேல் கோபித்துக்கொண்டு அவரைச் சிரசாக்கினை செய்துவிடும்படி உத்தரவுகொடுத்ததாகவும், நான் பிறக்கிறதற்கு முதல்நாள் ராத்திரி சொப்பனங்கண்டார்.

என் தகப்பனார் விழித்துக்கொண்டபோது தலையை இழக்காவிடினும் அச்சொப்பனத்தினாலுண்டான பயத்தால் பாதிபுத்தியை இழந்துவிட்டிருந்தார். பூர்வவிதி ஒன்றுண்டென்று அவர் உறுதியாய் நம்பி, என்னால் அவருக்கு ஏதோ பெருத்ததீங்கு உண்டாகப் போகிறதாக அபிப்பிராயப்பட்டு, நான் பிறக்குமுன்னமே கூட என்மேல் அவருக்கு வெறுப்புண்டாய், இக்கனவினால் சுவாமி தன்னை எச்சரிக்கைசெய்ததாக நினைத்து, என்னைப் பாராமலிருக்கத் தீர்மானித்து, மறுதினம் காலையிலேயே அலப்போ நகரத்திற்குக் கப்பலேறிப் போய்விட்டார்.

படிப்புமுதலானவைகள் ஒன்றுமில்லாமல் நான் வளர்ந்துவருகையில், எனக்கு ஏன் அதிர்ஷ்டஹீனனான மூராத் என்று பேரிட்டார்களென்று ஒருநாள் நான் என் தாயைக் கேட்டதற்கு, என் தகப்பனார் கண்ட கனவின்நிமித்தம் அப்பேர் எனக்கு இட்டார்களென்றும், பிற்காலத்தில் நான் அதிர்ஷ்டவானானால் ஒருவேளை அதை மறந்துவிடுவார்களென்றும் சொன்னாள். என்னை வளர்த்த கிழதாதியோ இதைக்கேட்டு தலையசைத்து: "ஹீன அதிர்ஷ்டனாகப் பிறந்தவனுக்கு அதிர்ஷ்டம் பின்னிட்டு எப்படிவரும்? தலைவிதியை மாற்ற யாரால் ஆகும்?" என்று என் காதில் படும்படி என் தாயாரோடு மெல்லச் சொன்னாள்.

நான் அப்போது பால்லியமாயிருந்தும் இவ்வார்த்தை என் மனதில் செம்மையாய்ப்பட்டு எனக்குத் திகிலுண்டாக்கிற்று. பிறகு எனக்கு நேரிட்ட இடர்களைக் கண்டு முன்னே தாதிசொன்னது சரிதானென்று திடமாய் நம்பினேன். தேசாந்திரம்போயிருந்த என் தகப்பனார் திரும்பிவந்தபோது எனக்கு எட்டுவயது. மறுவருஷத்தில் என் தம்பி ஸாலதின் பிறந்தான். விலையுயர்ந்த சரக்குகள் ஏற்றப்பட்டிருந்த அவருடைய ஒரு கப்பல் அவன் பிறந்த

தினத்தில் பத்திரமாய் துறைமுகம் வந்து சேர்ந்தபடியால் அவனுக்குப் பாக்கிய ஸாலதின் என்று பேரிட்டார்கள்.

நான் செய்யத்தொடங்கின வேலைகளில் எல்லாம் என் துர்திர்ஷ்டம் முன்னின்றுப்போல், என் தம்பி செய்யத்தொடங்கின காரியங்களில் எல்லாம் ஜெயமே முன்னின்றது. அந்தக் கப்பல் வந்ததுமுதல் நாங்கள் டம்பமாய் ஜீவனஞ்செய்தோம். ஸாலதினுடைய அதிர்ஷ்டத்தினுலேதான் என் தந்தை பாக்கியதசையை அனுபவிக்கிறுரென்று ஜனங்கள் நம்பினுர்கள்.

ஸாலதினுக்குச் சுமார் இருபதுவயதில் என் தகப்பனுர் சாகக்கிடக்கையில் தன் படுக்கையண்டையில் என் தம்பியை வரவழைத்து வெகு டம்பமாய் ஜீவனஞ்செய்ததால் தன் செல்வமெல்லாம் அழிந்துபோனதாகவும், இடைவிடாமல் ஜெயங்கொள்ளலாமென்று நம்பி தன் சக்திக்கு மீறிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டபடியால் தன் அலுவல்களெல்லாம் தாறுமாறுயிருப்பதாகவும் அவன் திடுக்கிடும்படி அவனுக்குத் தெரிவித்தார்.

டம்பமாய் ஜீவனஞ்செய்துவந்ததின் பயன் என்னவென்றுல், இரண்டு பெரிய சிறுபாத்திரங்கள்தவிர வேறென்றும் அவருடைய பிள்ளைகளுக்கு ஆஸ்திவைக்க மீவில்லை. அப்பாத்திரங்கள் அழகிலே பேர்போனவைகள். அவைகளை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு அனுகூலஞ்செய்வதில் இரக்ஷாபந்தனமோ வசியமந்திரமோ என்று சொல்லும்படியான யாருக்கும் தெரியாத எழுத்துகளில் சில சுலோகங்கள் அவைகளில் எழுதப்பட்டிருந்ததால் அவைகள் பின்னும் விலையுயர்ந்தவைகள்.

நான் அதிர்ஷ்டஹீனனுனதால் தப்பாமல் அதை உடைத்துவிடுவேனென்று என் தகப்பனுர் நம்பி, அவைகளில் ஒன்றையாவது எனக்குக் கொடுக்கக்கூடாதென்று சொல்லி, அவ்விரண்டையும் என் தம்பிக்கே கொடுத்துவிட்டார். ஆகிலும் அவர் இறந்தபிறகு உதாரகுணமுள்ள என் தம்பி அவ்விரண்டு பாத்திரங்களில் என் மனதுக்கேற்றதை என்னை எடுத்துக்கொள்ளும்படி சொல்லி, அதிர்ஷ்டத்திலும் துரதிர்ஷ்டத்திலும் தனக்கு யாதொரு நம்பிக்கையும் கிடையாதென்று பலமுறை உரைத்து என்னைத் தைரியப்படுத்த முயன்றுன். ஆனுல் நானே அவன் அபிப்பிராயத்தில் கலக்காமல் நான் என்னசெய்தபோதிலும் துர்ப்பாக்கியனுகிய மூராத் ஆகத்தான் இருப்பேனென்று உறுதியாய் நம்பினேன். என் தம்பியோ, என் தகப்பனுர் எங்களை தரித்திரஸ்திதியில் விட்டுப்போனதற்காகக்கூட ஒருவிதத்திலும் அதைரியப்படாமல் தான் பிழைக்க ஏதாவது ஒரு வழிதேடுவது நிச்சயந்தானென்று சொல்லி அப்படியே செய்தான்.

அச்சிறு பாத்திரங்களைப் பரிசோதித்தபோது பளபளப்புள்ள ஒருவித இந்திரநீலவர்ணத்துள் அவைகளில் அகப்பட்டது. இதைக்கொண்டு நல்ல சாயம்போடலாமென்று எண்ணி அதை பரிக்ஷைபார்த்தபோது கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டபிறகு எல்லாரும் வியப்படையும்படி அது கைகூடிவந்தது.

என் தகப்பனாருடைய ஜீவதசையில் அரசனுடைய அரண்மனையில் நாயகிமார்களுக்கும் என் தாயாருக்கும் விலையுயர்ந்த புடைவைகள் கொடுத்துவந்த வர்த்தகனுக்கு என் தம்பி ஸ்வல்பஉபகாரஞ்செய்திருந்ததால் அவன் இந்த புது இந்திரநீலவர்ணச்சாயத்தை எல்லாரும் மெய்ச்சிக்கொள்ளும்படி செய்ய ஒப்புக்கொண்டான். உள்ளபடியே அது மிகவும் அழகாயிருந்தபடியால் மற்ற வர்ணத்தைவிட இதுவே நல்லதென்று எல்லாரும் மெச்சிக்கொண்டபடியால் ஸாலதின் உடைய கடையை அநேக வாடிக்கைக்காரர்கள் சூழ்ந்துகொண்டார்கள். அவனது வசியமுள்ள நடபடிக்கையும் நயப்பேச்சும் அவனுக்கு அதிக உதவிசெய்தன. விசனகரமான என் முகத்தைக் கண்டவர்களெல்லாம் என்மேல் அருவருப்புக் கொண்டார்கள்.

விலையுயர்ந்த துணி கட்டிக்கொண்டு இரண்டு தாதிமாரோடு ஒரு நாயகி என் தம்பி கடைக்கு ஒருநாள் வந்தபோது அவன் வெளியே போயிருந்தபடியால் நான்மட்டும் கடையிலிருக்கும்படி நேரிட்டது. அந்த அறையில் வைத்திருந்த என் சிறுபாத்திரத்தை அவள் தற்செயலாய்க் கண்டு அதனிடத்தில் அத்தியந்த விருப்பங்கொண்டு, அதை நான் விற்கச் சம்மதித்தால் அதற்கு நான் கேட்டவிலை கொடுப்பதாக அவள் சொல்லியும், இவ்விரக்ஷாபந்தனத்தை நானே வலியக்கொடுத்துவிட்டால் எனக்கு பெருத்த ஆபத்து சம்பவிக்குமென்று நம்பி, அதைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அவள் வெகுதூரம் வேண்டிக்கொண்டும் நான் அதைக் கொடுக்கமாட்டேன் என்று ஹடம் செய்தபடியால் அவள் கோபித்துக்கொண்டு கடையைவிட்டுப் போய்விட்டாள்.

என் தம்பி திரும்பிவந்தபிறகு நடந்ததை நான் அவனுடன் சொல்லி அவன் என்னைக் கொண்டாடுவான் என்று எதிர்பார்க்கையில், அவனோ என் சிறுபாத்திரத்தில் எழுதப்பட்டிருந்த மந்திரத்தை நான் மூடத்தனமாய் நம்பினதற்காக என்னைக் கண்டித்து; அவ்விரக்ஷாமந்திரத்தினால் ஈடேறலாமென்கிற வீண் எண்ணத்தைக்கொண்டு என் செல்வத்தை விர்த்திசெய்யும்படியான நிலையான சாதகங்களைத் தவறவிடுதல் பெருத்த மூடத்தனமென்று சொல்லியும் அவன் சொல்படி நடக்க நான் துணியவில்லை. மறுநாள் அந்த நாயகி திரும்பிவந்தபோது என் தம்பி தன் பாத்தி

ரத்தைப் பதினாயிரம் பொன்னுக்கு அவளுக்கு விற்றுப்போட்டு, அப்பணத்தைக்கொண்டு புதுச்சரக்குகள் வாங்கிக் கட்டிவைத்து அதிகலாபம் அடைந்தான். நானோ தருணம்தப்பிப்போகிற வரையில் ஆலசியம்செய்து பிறகு மனஸ்தாபப்பட்டேன். சமயத்தில் எனக்கு விவேகமிருக்கிறதில்லை; ஆகையால் நான் இதைத் தான் துரதிர்ஷ்டமென்று சொல்லுகிறேன்.

என் தம்பியின் பாத்திரத்தை வாங்கினவள் அரசனுடைய பிரியமான நாயகி, மேலும் அதிக செல்வாக்குள்ளவள்; அவள் இஷ்டத்திற்கு நான் விரோதமாய் நடந்தபடியால், அவள் என்னைப் பகைத்து என் தம்பிகடையில் நானிருக்குமளவும் அவள் அங்கே வருவதில்லையென்று சொன்னாள். அவனுக்கு என்னைவிட்டுப் பிரிய மனமில்லை. ஆகிலும் நற்குணமுள்ள என் தம்பி என்னால் கெட்டுப்போவதைப்பார்த்து சகிக்காமல், எனக்கு என்னகஷ்டம் வந்தாலும் வரட்டுமென்று எண்ணி அவனுடன் சொல்லாமலே அவன் வீட்டைவிட்டு நீங்கினேன். நான் பசியால் மிகவும் வருந்தி ஒரு ரொட்டிக்கடைக்குள் போய் ஹீனஸ்வரத்தோடு பிச்சையிடும்படி கேட்கவே, ரொட்டி சுடுகிற எஜமானுடைய உடுப்பைப்போட்டுக்கொண்டு அவனுக்குப் பதிலாக ரொட்டியை எடுத்துக்கொண்டு அன்றையதினம் அப்பட்டணத்தில் நான் திரிய ஒத்துக்கொண்டபடியால், நான் தின்னக்கூடிய அளவு அவன் எனக்குக் கொடுத்தான். அந்தச்சமயத்தில் என் துரதிர்ஷ்டத்தால் வழக்கப்படி எனக்கு ஞாபகமும் விவேகமும் தப்பிப்போயிருந்தபடியால், ரொட்டிக்காரனுடைய துரோகசிந்தைக்கு நான் உடன்படும்படி நேரிட்டது. அப்போது அவ்வூரில் விற்பனையாய்வந்த ரொட்டி நிறையிலும் தடத்திலும் குறைந்திருந்தபடியால் ஜனங்கள் அதிக அதிர்ப்தியடைந்திருந்தார்களென்றும், இவ்வித அதிர்ப்தியினால் தப்பாமல் அடிக்கடி ஊர்க்கலகம் நேரிட்டு ரொட்டிக்காரர்களில் தலைவன் பிராணனிழப்பது வழக்கந்தானென்றும் எனக்குத் தெரிந்திருந்தும் அப்போது அது எனக்கு ஞாபகமில்லாமல்போயிற்று.

ரொட்டிக்காரனுடைய உடுப்பைப் போட்டுக்கொண்டு ரொட்டியை எடுத்துக்கொண்டு பக்கத்துத் தெருவுக்குப் போகுமுன்னமே ஜனங்கள் கூட்டங்கூடி என்னை தூஷித்து சாபித்துக்கொண்டே அரசனுடைய வாசல்வரைக்கும் என்னைத் துரத்திவந்தபோது, அவ்வரசன் இவ்வல்லடியைக் கண்டு திகிலடைந்து வழக்கப்படி என் தலையை வாங்கிவிடும்படி உத்தரவுசெய்தான்.

அப்போது நான் முழந்தாளிட்டு அவர்கள் நினைத்ததுபோல் நான் ரொட்டிக்காரன் அல்லவென்றும், அவனுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதென்றும், நிறைகுறைந்த ரொட்டியை அந்நகரத்து ஜனங்களுக்கு நான் எப்போதும் கொடுத்ததே

இல்லையென்றும் முறையிட்டேன். அன்றையதினம் ரொட்டிக்காரர் எஜமானுடைய உடுப்பைமாத்திரம் போட்டுக்கொண்டதோஷம் ஒன்றேதவிர மற்றவிஷயத்தில் நான் நிரபராதியென்றும், எந்த வேலைசெய்யப்போனாலும் முன்னே வந்துநிற்கிற என் தௌர்ப்பாக்கியத்தினாலேதான் இதையும் செய்யும்படி நேரிட்டதென்றும் வெளியிட்டேன். அக்கலகக்காரர்களில் சிலர் என் முட்டாள்தனத்திற்காக நான் தலையிழக்கவேண்டியது தகுதிதானென்றார்கள். மற்றவர்களோ என்னைக் கண்டு பரிதபித்து, அரசனுத்தரவை நிறைவேற்றவந்த உத்தியோகஸ்தன் இரைச்சல்போட்டுக்கொண்டிருந்த அக்கலகக்காரர்களில் சிலரோடு ஒருபக்கமாய் திரும்பிப் பேசிக்கொண்டிருக்கையில், அந்த ஜனசங்கத்தில் எனக்கு வழிவிட்டார்கள். இவ்வனுகூலத்தினால் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டேன்.

வாழ்நாளை வீண்போக்காமை.

ஐசுவரியவான்களுக்குள் வரைய்றையில் நின்று செலவு செய்யாமல் ஆஸ்தியை இழந்துபோகிறவர்கள் அநேகர்; காலத்தை வீண்செலவினால் போக்குவோர் அதிலும் அநேகர். தனம், காலம் ஆகிய இவ்விரண்டினுள் பின்னது எல்லாருக்கும் பொதுவாய் உள்ள ஆஸ்தியாகையாலே அதை தனத்தைவிட விசேஷமாக மதிக்கவேண்டிய நியாயமுண்டு. அப்படியிருக்க, சிறுவர் நமக்கு எத்தனையோவருஷகாலம் இருக்கிறது, அதில் எவ்வளவு வீணில் சென்றுவிட்டாலும் இன்னும் இருந்துகொண்டேயிருக்கும் என்று நினைக்கிறார்கள். அப்படி நினைக்கிறதினால் முடிவில் என்ன ஆகுமென்றாலோ, பெருஞ்செல்வம் பொருந்தியவர்கள் எப்படி செலவழித்தாலும் தங்கள் செல்வம் குன்றாமல் மேன்மேலும் வளர்ந்துகொண்டிருக்குமென்று எண்ணி கடைசியில் தரித்திரதசைக்கு வந்தபிறகு ஐயோ ஏமாந்து மோசம்போனோமேயென்று பரிதாபப்படுகிறார்களே, அவர்களோடு சமானமாவார்களேயன்றி வேறில்லை. முன்னாலே செய்வதைச் செய்துவிட்டு பின்னாலே அதனுடைய தீங்கை அனுபவிக்கும்போது மனவருத்தமடைகிறது உபயோகமற்ற காரியமாதலின் எல்லாவிஷயங்களிலும்போல நம்முடைய காலத்தைச் செலவழிக்கும் விஷயத்திலும் முன்ஜாக்கிரதைவேண்டும்.

இந்த ஒருநிமிஷத்திலே என்ன செய்துவிடப்போகிறோம்? இந்தக் கால்மணிநேரத்தில் என்ன ஆகப்போகிறது என்று ஒரு நாளைக்குள்ளே எத்தனையோ நிமிஷங்களையும் கால்மணிகளையும் வீண்போக்கிவிடுகிறார்கள். இப்படிக் கழிக்கப்பட்ட ஒவ்வொரு

பாடசாலையில் சேரவேண்டியது முதலியவைகளைப்பற்றின விண்ணப்பங்கள் அவருக்கே அனுப்பவேண்டும். அந்தப் படிப்புமுடிய மூன்றுவருஷகாலஞ்செல்லும். ஒரு வருஷத்தில் கோடைகால படிப்பென்றும், மழைக்காலப்படிப்பென்றும் இரண்டுவகையாகப் பாடங்கள் நடத்தப்படும். வருஷாவருஷம் கோடைகாலப்படிப்பு எப்ரல்மீ 1வ ஆரம்பித்து, ஜூன்மீ 30வ வரையில் நடத்தப்படும். மழைக்காலப்படிப்பு அக்டோபர்மீ 1வ ஆரம்பித்து, மார்ச்சுமீ 31வ வரையில் நடத்தப்படும். மழைக்காலத்துப் பாடசாலைப் படிப்பு அக்டோபர்மீ முதலில் ஆரம்பிப்பதாயினும், அக்காலத்தில் மழைக்காலப் பயிர்செய்யும் வகைகளைப் பார்ப்பதற்காகவும், தாங்களே சில பயிர்த்தொழில் செய்வதற்காகவும் செப்டெம்பர்மீ முதலிலேயே வித்தியார்த்திகள் அங்கே வந்து சேரவேண்டும். அந்த வித்தியாசாலையில் வேளாண்மையைப்பற்றியவிஷயங்களெல்லாம் கற்பிக்கப்படுமென்பதுமாத்திரமேயல்ல. ரஸாயனசாஸ்திரம், மண் கல் முதலிய தாதுவர்க்கசாஸ்திரம், ஜந்துசுபாவசாஸ்திரம், ஔஷதிசாஸ்திரம், கால்நடை வயித்தியசாஸ்திரம் இவைகளிலும் பயிர்த்தொழிலுக்குவேண்டுமளவு கற்பிக்கப்படும். இவைகளோடுகூட இங்கிலாந்தில் விவசாயக்கணக்கெழுதும்வகை, பூமிகளை அளந்து கணக்கிடுதல், சித்திரமெழுதல் இவைகளும் பயிர்த்தொழிலுக்கு அவசியமாதலால் கற்பிக்கப்படும். உபந்நியாஸங்களும் வகுப்பில் ஆக்ஷேபமுதலியவைகளும் செய்து விஷயங்களை அறிவிப்பார்கள். வெளியேபோய்ப் பயிர்செய்யும் வகைகளைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டுவதற்காக ஏற்படுத்தியகாலங்களில் ஒவ்வொரு வித்தியார்த்தியும் அந்தத் தோட்டத்தில் நடந்தேறிவருகிற செய்கைகளைத் தாங்களே செய்யவேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளும் நாளுளும் தோட்டத்தில் செய்கிற காரியங்களை நன்றாயறிந்துகொண்டு அதைப்பற்றிய தினசரிப்புத்தகம் ஒன்று எழுதி வைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் ஏற்படுத்திய சில நிபந்தனைகளின்பேரில் ஐரோப்பியர்களாகட்டும், யூரேஷியர்களாகட்டும், சுதேசிகளாகட்டும், அவர்கள் ஏற்படுத்திய ஒரு தொகைக்குட்பட்ட பிள்ளைகளைமாத்திரந்தான் சம்பளமில்லாமல் சேர்த்துக்கொள்ளப்படும். சில நிபந்தனைகளின்மேல் பிள்ளைகளுக்குப் படிப்புச் சம்பளமும் வித்தியார்த்தி வேதனமும் கொடுக்கப்படும். அவர்களுக்கு வேண்டிய அளவுக்குப் பிள்ளைகள் அதிகமானாலல்லது பிள்ளைகளுக்குப் பிரவேசபரீக்ஷையொன்றும் கிடையாது. மெட்ரிகுலேஷன் பரீக்ஷை கொடுத்தவர்களாயிருந்தால் அவர்களைச் சேர்த்துக்கொள்ள யாதொரு ஆக்ஷேபமுமில்லை. முதல்வருஷத்தில் முதல்பாகத்துக் கடைசிபரீக்ஷையில் மிக்க சமத்தர்களாய்த் தேறுகிற இருபத்துநான்குபேர்களுக்கு கவரன்மென்டார் ஏற்படுத்திய படிப்புச்சம்பளம் கொடுக்கப்படும். அந்த முதல் வருஷத்து மற்றப் பாதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 12–8–0 வீதம் கொடுக்கப்படும். இரண்டாம் வருஷம் ஒவ்வொருமாதமும் 15–ரூபாய் கொடுக்கப்படும். மூன்றாம்வருஷத்தில் ஒவ்வொருமாதத்திற்கு ரூபாய் 17–8–0 கொடுக்கப்படும். அவர்கள் ஏற்படுத்திய ஒவ்வொரு பரீக்ஷையிலும் அவர்க்குத் திருப்தியாய் உத்தரம்கொடுத்தாலன்றி மேற்படி சம்பளம் விருத்திசெய்யமாட்டார்கள். அதிகாரிகள் ஏற்படுத்திய விதிகளுக்குக் கீழ்ப்படியாமலிருந்தாலும், படிப்பை அசட்டைசெய்தாலும் அப்படிப்பட்ட பிள்ளைகளுக்குக் சம்பளம் கொஞ்சமாவது முழுதுமாவது அவர்களுடைய நடத்தைக்குத்தக்கபடி குறைக்கப்படும். சாமர்த்தியக்குறைவினாலும் படிப்பில் ருசியில்லா

மையாலும் மேன்மேலும் கற்பிக்க உதவமாட்டார்களென்று தோன்றினால் அப்புறம் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாது. இந்தப் படிப்புச் சம்பளம் இரண்டாவருஷந்தான் கொடுக்கக்கூடும். அதுவும் அவன் ஒரு வருஷத்திற்குள் உயர்ந்த தரகதிப் பரீக்ஷைகொடுத்தாலன்றி நீடித்துநடக்க மாட்டாது. முதல்வருஷத்து வருஷாந்தரப் பரீக்ஷையில் அதிகமாய் மார்க்கு வாங்கி மற்ற விஷயங்களிலும் மிகவும் திருப்திகரமாயிருக்கிற மூன்று [illegible]ணாக்கருக்கு மாதம் ஒன்றுக்குப் பத்துரூபாய்வீதம் வித்தியார்த்திவேதனம் கொடுக்கப்படும். அது ஒருவருக்கு இரண்டுவருஷகாலந்தான். முன் சொல்லிய படிப்புச்சம்பளம் கொடுப்பதற்கு என்னென்ன நிபந்தனைகளோ அவை இந்த வித்தியார்த்திவேதனத்திற்கும் அவசியமானவை. இவ்விதமாய் முழுதும் படித்தபின்பு அந்த விஷயத்தில் வேண்டிய ஞானமுடையவர்களாகத் தோற்றி மற்றவிஷயங்களிலும் திருப்திகரமான நடத்தையுடையவர்களாயிருப்பவர்களுக்கு அவர்களுடைய திறமையைப்பற்றி ஒரு யோக்கியதாபத்திரம் கொடுக்கப்படும். மேற்படி பாடசாலை வருகிற அக்டோபர்மீ 1௳ ஆரம்பிக்கப்படுமாம்.

சமாசாரம்.

‘சக்கரவர்த்தினீ’ என்னும் புதியபட்டம்.—நமது மகாராணியார் ‘சக்கரவர்த்தினீ’ என்னும் பட்டம் பெற்றாரென்று நாம் சென்ற மேமீத்துச் சஞ்சிகையில் சொல்லியிருக்கிறோமல்லவா. அந்தச் செய்தியை இவ்விந்துதேசமுழுதும் பிரசுரஞ்செய்வதற்சாக இந்தியா கவர்னர் ஜனரல் அவர்கள், இத்தேசத்தில் பூர்வராஜாக்களும் மஹம்மதியர்களும் அரசாண்டுவந்த பட்டணமான டில்லிநகரத்தில் வருகிற 1877–௵ ஜனுவரிமீ 1௳ ஒரு ராஜசபை சேர்க்கும்படி நிச்சயித்திருக்கிறார்களாம்.

மகாராணியார் தமது ஆளுகைக்குட்பட்டதான இத்தேசத்து க்ஷேமத்திற்காகவும், தம்மிடத்தில் அநேக சிற்றரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் ஜனங்களுக்கும் உள்ள ராஜபக்தியையும் அநுராகத்தையும் தாம் பெருமைபாராட்டுவதற்காகவும் மிகவும் தயவுசெய்து அங்கீகரித்த ‘ஹிந்துதேச சக்கரவர்த்தினீ’ என்னும் பட்டத்தை கவர்னர்கள், உபகவர்னர்கள், நேபாபுகள், மகாராஜாக்கள், பிரபுக்கள்முதலியவர்களுக்குச் சபையில் பிரசித்தப்படுத்தி, இவர்கள் மூலமாய் அதன் கருத்தை எல்லா ஜனங்களுக்கும் தெரியப்படுத்தப்போகிறார்கள்.

Printed at the C. K. S. Press.



VIEW ON THE TRONDHJEM FIORD.

நார்வேதேசம்.